செ.வெ.எண்: 27 நாள்: 09.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.23.68 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், தொட்டியம்பட்டி ஊராட்சி, தொட்டியம்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.22.78 இலட்சம் மதிப்பீட்டில் 1 இலட்சம் எண்ணிக்கையில் அமைக்கப்பட்டு வரும் நாற்றங்கால் நடவு செய்தல் பணியையும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.90,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மண்புழு உரம் தயாரிப்பு கொட்டகை பணியையும் என மொத்தம் ரூ.23.68 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது நாற்றங்கால் பணிகளில் 1 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிக்கான இலக்கினை விரைவில் முடித்து இந்த மரக்கன்றுகளை பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கி சாலையோரங்கள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் சிறந்த முறையில் நட்டு வளர்த்து பராமரிக்கவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.



இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சிங்காரவேலு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாலு, உதவி பொறியாளர் திரு.பாலசுப்ரமணியன், இளநிலைப்பொறியாளர் திரு.கதிரேசன், ஒன்றியப்பணி மேற்பார்வையாளர்கள் திரு.சாரதிகண்ணன், திரு.வியாகுளம், திரு.ரவி, பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கணேசன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**